## கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதி செயற்திட்டம் - 2014

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதி செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் 2009 ஒக்தோபர் 22 இல் கைச்சாத்திடப்பட்ட 2546-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் நோக்கங்கள், அமுலாக்கல், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதி செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கிழக்கு மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வட மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவர்களாகவும் முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் உள்ளன. மாகாண வீதிகளைப் புனரமைத்து முன்னேற்றுதல், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் செயற்திட்ட முகாமைத்துவ திறமைகளை உயர்த்துதல் மற்றும், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள அலுவலகங்களின் பௌதீக வளங்களை முன்னேற்றுதல் என்பவற்றின் மூலம் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள போக்குவரத்து முறைமைகளை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 78 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது 89.74 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி தொகையான ஐ.அ.டொலர் 8 மில்லியன் அல்லது 10.26 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது அதனது செயற்பாடுகளை 2009 மார்ச் 20 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்படவேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதி 2015 மார்ச் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழான மீளெடுப்புக்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், கட்டுநிதி நிதியக் கணக்குகளிலிருந்தான பற்றுகைகள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் என்பன செயற்த்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

-----------------------------

### 2.1 அபிப்பிரயாம்

------------------------

எனது பரிசோதனையிலிருந்து தெரிவதும் எனக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கு அமைய,

(அ) செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததெனவும் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தக் கூடியவாறு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள், அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டடிருந்தன என்றும்,

(இ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது கட்டுநிதி நிதிய கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்புகைகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பந்தகாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் ஊடாக 2013 இல் ரூபா 13.38 மில்லியன் மற்றும் ரூபா 9.74 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் ஆராய்ச்சி உபகரணங்கள் மற்றும் 2014 இல் ரூபா 9.74 மில்லியன் கிரயத்தில் வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மண்டப பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் செயற்திட்டத்தின் சொத்துக்களாக கணக்கிடுவதற்குப் பதிலாக சிவில் வேலைகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 312.28 மில்லியன் தொகையான ஆண்டின் போது செய்யப்பட்ட மீளளிப்புக்கள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றால் பேணப்பட்ட ஏடுகளில் காட்டப்பட்ட ரூபா 272.71 மில்லியன் மற்றும் ரூபா 193.77 மில்லியன் ஆன நேரொத்த தொகைகளுடன் ஒத்திருக்கவில்லை. செயற்திட்டமானது மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 70 | 7,980 | 728 | 4.12 | 540 | 55.56 | 7,279 |
| இலங்கை அரசாங்கம் | 08 | 912 | 121 | 0.92 | 121 | 7.93 | 1,040 |
| மொத்தம் | 78 | 8,892 | 849 | 5.04 | 661 | 63.49 | 8,319 |

செயற்திட்ட காலப்பகுதியானது 09 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் முழுக் காலப்பகுதியின் 95 சதவீதம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடந்திருந்தது, கடன் பெறுகைகளின் 80 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், வட மத்திய மாகாணத்திலுள்ள 19 மாகாண வீதிகள் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள 17 மாகாண வீதிகள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் உரிய மாகாண சபைகளின் கீழ் செயற்பட்ட மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகளின் பாரமரிப்பு வேலைகள் அடுத்த 03 ஆண்டுகளிற்காக ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், புனரமைக்கப்பட்ட வீதிகளின் பராமரிப்புகளின் தேவைப்பாடு பொறியியலாளரின் மதிப்பீடுகளில் போதியளவு சுட்டிக்காட்டப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால், கேள்வியாளர்கள் அவர்களுடைய கேள்வி ஆவணங்களில் வீதிப்பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக குறைவான வீதங்கள் கோரியிருந்தனர். வட மத்திய மாகாணத்தில் செயற்திட்டத்தின் கீழ் புனமைக்கப்பட்ட 19 வீதிகளின் பராமரிப்பிற்காக மொத்த ஒப்பந்த தொகையின் 0.25 சதவீதம் முதல் 2.31 சதவீதம் வரையான வீச்சில் ஒதுக்கீடுகள் மாத்திரம் செய்யப்பட்டிருந்தது என இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது.

மேலும், பொத்தன- இஹலகம வீதி, குருகல்கின்ன- எல்லபொத்தன- வலகவித்தவெவ வீதி, பரசங்கஸ்வெவ- கருகெலியாவ வீதி மற்றும் ஓயாமடுவ- தன்திரிமல வீதி என்பவற்றின் பல இடங்களில் வீதிகளின் படிமங்களை குறைத்தல் மற்றும் வீதி மேற்பரப்புகளில் வேறு குறைபாடுகள் 2015 மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கணக்காய்வாளர்களால் செய்யப்பட்ட கள வருகைகள் வெளிப்படுத்தியது. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கத்தின் பிரகாரம், புனரமைப்பு வேலைகள் பூர்த்தியான பின்னர் வீதி பராமரிப்பு வேலைகள் ஒப்பந்தகாரரால் திருப்திகரமாக அமுலாக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால், வீதியின் பல இடங்களில் வெடிப்புக்கள் காணப்பட்டன.

ஆதலால், ஒப்பந்தகாரர்கள் வீதி பராமரிப்பு நோக்கங்களிற்காக கேள்வி ஆவணங்களில் ஒதுக்கீடுகள் போதாமை காரணமாக பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருக்கவில்லை என்று சான்றுபடுத்தியது. மேலும், செயற்திட்டமானது குறைபாட்டு பொறுப்புக் காலத்தின் போது ஒப்பந்தகாரர்களை கண்காணிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பொருத்தமான வழியில் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.